




ஆன்மிக சிகரத்தின்

# நம்ம ஊரு நியூஸ்

RNI No: TNTAM/2017/75122

Editor: V.S.N.Sharma | Chief Reporter : S.Esakki | Chennai : 9710755689 | 9962505384 | 4 பக்கம் | 9.3.2026 திங்கட்கிழமை







### பெரம்பலூர் மாவட்டத்தில் அ.தி.மு.க.வைச்சேர்ந்த 200 பேர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. முன்னிலையில்

# தி.மு.க.வில் இணைந்தனர்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்!





பெரம்பலூர், மார்ச் 9: பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலை மையில், கழக துணைப் பொதுச்செயலாளர் - மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி. முன்னி லையில், ஓ.பி.எஸ். அணியைச் சேர்ந்த அ.தி.மு.க. வினர், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்தமிழ் செல்வன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி சாத்தனவாடி துரை ஆகியோர் ஏற்பாட்டில் ஜெ. பேரவை அரும்பாவூர் முன்னாள் நகரச் செயலாளர் ஆர்.பெரிய சாமி, பா.ம.க. அரும்பாவூர் முன்னாள் நகரச் செயலாளர் ரவிக்குமார் மற்றும் சாத்தனவாடி, மேட்டுப்பாளையம், எறை யூர் சர்க்கரை ஆலை ஆகிய கிராமங் களில் இருந்து 200 பேர் தங்களை தி.மு.க. வில் இணைத்துக் கொண் டனர்.

இந்த நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தொகுதி பார்வையாளர் தங்க. சித்தார்த்தன், தலைமை செயற் குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.இராஜ்குமார், செ.நல்ல தம்பி, தி.மதியழகன் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் சி.ராஜேந் திரன், ந.ஜெகதீஷ்வரன், அழகு. நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ் கர், துணை அமைப் பாளர் டி.ஆர்.சிவசங்கர், மாவட்ட மக ளிர் அணி அமைப்பாளர் மகா தேவி ஜெயபால், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.






# இந்திய ஜனநாயக கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம்

பெரம்பலூர் மார்ச்.9: இந்திய ஜனநாயக கட்சியின் குன்னம் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் குன்னம் அருகே உள்ள அந்தூர் பகுதியில் நடைபெற்றது. இதில் கட்சியின் நிறுவனர் பாரிவேந்தர், மாநில தலைவர் ரவி பச்சமுத்து உள்ளிட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினர். அப்போது பேசிய பாரிவேந்தர், தமிழகத்தில் அனைத்து துறைகளிலும் லஞ்சம், ஊழல் பெருகி விட்டது. பொதுமக்கள் எதற்காக சென்றாலும் லஞ்சம் கேட்கிறார்கள்.

மேலும் சொந்த கட்சிக்காக உழைத்தவர்களுக்கு பதவி கொடுப்பதற்கு திமுகவினர் லஞ்சம் பெறுகிறார்கள். இது மட்டுமின்றி அரசின் உயர் பதவிகளுக்கு பல கோடி ரூபாய் லஞ்சம், பெறுவதோடு இந்த பணம் முழுவதும் அக்கட்சியின் தலைமைக்கு செல்கிறது. இதனை அவர்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்கிறார்கள். மக்களின் வரிப் பணத்தில் அவர்கள் செல்வ செழிப்போடுவாழ்கிறார்கள். நீங்கள் ஓட்டுக்கு பணம் கொடுத்தால் போதும் என்று கூறி அவர்களுக்கே வாக்களித்து தொடர்ந்து வெற்றி பெறச் செய்கிறீர்கள். வேறு மாநிலத்தைச் சேர்ந்த திமுக தலைவர்கள் தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் பாடு படுவதாக சொல்லி கூறி பொய் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவித்தார். இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் மாநில தலைவர் ரவி பச்சமுத்து,

இந்திய ஜனநாயகக் கட்சியின் சார்பாக நாங்கள் வந்து கலந்தாய்வுக் கூட்டத்தை ஆரம்பித்து விட்டோம். எல்லா மாவட்டங்களுக்கும் செல்ல உள்ளோம். இன்று இரண்டு, குன்னம் மற்றும் திருக்கோவிலூர் தொகுதியில நேற்று கூட்டம் நடத்தினோம். இதன் மூலமாக கட்சி தேர்தல் பிரச்சாரத்தை நிறுவனர் பச்சமுத்து தொடங்கியிருக்கிறார். என்.டி.ஏ (NDA) கூட்டணியில நம்ம 7 தொகுதிகள் கேட்டிருக்கோம். எல்லாம் டிஸ்கஷன்ல இருக்கு. கூட்டணி முடிவு பண்ணி, பிரதமர் வந்துட்டு போனதுக்கு அப்புறம்தான் அறிவிப்பார்கள் என்று கூறினார். உறுதியா தனிச் சின்னத்துல போட்டியிடுவோம். இலவசம் என்று இப்ப எல்லாரும் வராங்க. வந்துட்டு வேற வழியில்லாம அத காப்பியடிக்கிற சூழ்நிலை வருது. அதத் தவிர்த்தா நல்லது. ஏன் என்றால் அரசு இந்த பணம் எல்லாம் இருந்ததுன்னா ஒரு தொழிற்சாலைகளை உருவாக்கலாம், வேலை வாய்ப்பு உருவாக்கலாம், ஹாஸ்பிடல்ஸ் உருவாக்கலாம். அதுக்காக நான் இல்லாத ஏழை மக்கள் எல்லாம் கஷ்டப்படட்டும்னு சொல்லவில்லை அவங்களுக்கு அந்த நிலைமையே இல்லாம பண்றதுக்குதான் ஒரு முயற்சி. ஏன்னா இந்த திராவிட ஆட்சி வந்து கிட்டத்தட்ட எழுபது ஆண்டுகளா ஆண்டுட்டு இருக்காங்க.

அந்த நிலையில் மக்களுக்குத் தேவை என்ன, செல்ப் சபிஷியன்ட் என்று பார்த்து தன்னிறைவு பெற்ற மக்களாக சுயகௌரவத்தோட வாழணும்னு நாங்க நினைக்கிறோம். அதைத் தான் எங்கள் வேந்தர் சொல்கிறார். நாங்கள் இலவசத்தை தவிர்க்க வேண்டும் என்று கூறியதையே ரஜினிகாந்தும் சொன்னார் அதேபோல இப்ப விஜய்யும் சொல்கிறார். இப்ப விஜய் மாறி இருக்கிறார். இது சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி அப்பப்ப மாறிட்டுதான் இருக்கும். ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு கொள்கை இருக்கு, கோட்பாடு இருக்கு.

அந்த கோட் பாட்டுல நாங்க உறுதியா இருக்குறோம். இன்றைக்கு கூட்டணி இருக்கும்போது கூட்டணிக் கொள்கைக்கு என்ன இருக்கோ என்.டி.ஏ அஜெண்டாவ நாங்க ஃபாலோ பண்ணுவோம். அதுக்காக நாங்க செய்யவே மாட்டோம்னு இல்ல. நாளைக்கு நாங்க வளர்ந்து வரும்போது எங்கள் கொள்கை கோட்பாடுகளை நிறைவேற்றுவோம்.

இந்நிகழ்ச்சியில் இந்திய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சண்முகம், துணைப் பொதுச் செயலாளர் ஆனந்த முருகன், சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் வெங்கடேசன், மாநில தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் ரமேஷ், குன்னம் சட்டமன்றத் தொகுதி மாவட்ட தலைவர் எம் டி அன்பழகன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தலைவர் அழகுவேல் மற்றும் இந்திய ஜனநாயக கட்சி மாவட்ட நகர ஒன்றிய பொறுப்பாளர்கள் மகளிர் அணியினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சித்தமிழர் கனவு திட்டமான வேர்களைத் தேடி பயணம்

பெரம்பலூர், மார்ச்9: விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சித் தமிழர் அவர்களின் கனவு திட்டமான வேர்களைத் தேடி பயணம் இன்று இரவு 8.00 மணிக்கு பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டம் அனுக்கூர் கிராமத்தில் கட்சியின் மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார் அவர்களின் தலைமையில் நடந்தது. இந்த வேர்களைத் தேடி பயணத்தில் மறு சீரமைப்பு செய்து கிளை செயலாளர் சாமிநாதன், கிளை பொருளாளர் நித்திஷ், துணைகிளைசெயலாளர்கள் சூரியா, குமார், இளஞ் சிறுத்தை எழுச்சிபாசறை கிளை செயலாளர் ஏழுமலை, கிளை பொருளாளர் ஆகாஷ், துணை கிளை செயலாளர்கள் ராஜா, மணிகண்டனின் மகளிர் விடுதலை இயக்கத்தின் கிளை செயலாளர் ரஜினா, பொருளாளர் வெண்ணிலா, துணைகிளைசெயலாளர்கள் சாந்தா, செல்லம், செல்வம்பாள் ஆகியோர் புதிதாக பொறுப்பேற்றுக் கொண்டார், புதிய பொறுப்பாளர்கள் அனைவருக்கும் கட்சியின் மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார் அவர்கள் ஆடை போர்த்தி அனைவரின் பணி சிறக்க வாழ்த்தினார். மேலும் இந்த வேர்களைத் தேடி பயணத்தில் மகளிர் தின விழாவை சிறப்பாக கொண்டாடப்பட்டு, அனைவரும் இனிப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கட்சியின் பொருளாளர் சிறுவாச்சூர் பிச்சை பிள்ளை, மாவட்ட செய்தித் தொடர்பாளர் அ.இ.அழகுமுத்து, மாவட்ட துணைச் செயலாளர்கள் வெற்றியழகன், தங்க.சண்முகசுந்தரம், செயற்குழு உறுப்பினர்கள் காட்டு ராஜா, பாக்கியராஜ். இளஞ் சிறுத்தை எழுச்சிபாசறை மாவட்ட செயலாளர் அய்யம்பெருமாள், மகளிர் விடுதலை இயக்கத்தின் மாவட்ட பொருளாளர் சத்தியகலா, மாநில துணைச் செயலாளர் அம்பேத் கோகுல் கட்சியின் ஒன்றிய ராதாகிருஷ்ணன், கவியரசன், சக்திவேல், மகளிர் விடுதலை இயக்கத்தின் பொறுப்பாளர் ராசாத்தி, மேரி டயானா, உஷா, கார்த்திகேயன், பன்னீர், தென்னரசு, முருக விஷ்ணு, நடராஜ், பன்னீர், செங்கமலை, ராஜா, செந்தில் குமார் உள்ளிட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**தீர்மானம்.**

1.ஆதிதிராவிட சமூக மக்களுக்கு காலணி ஒதுக்கப்பட்ட வேண்டும்.

2. அனுக்கூர் பேருந்து நிலையத்தில் நிழற்கூடை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதுமான பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

4. கட்சியின் முதன்மைச் செயலாளர் அண்ணன் பாவரசு அவர்களுக்கு அனுக்கூர் கிராமத்தின் சார்பில் செம்மார்ந்த வீர வணக்கம் செலுத்துகிறது..







## வீடு கட்டுவதற்கு தோண்ட பட்ட இடத்தில்

# பெருமாள் சிலை கண்டெடுப்பு கிராம மக்கள் அதிர்ச்சி

பெரம்பலூர், மார்ச்.9: வீடு கட்டுவதற்கு தோண்டபட்ட இடத்தில் பெருமாள் சிலை கண்டெடுப்பு கிராம மக்கள் அதிர்ச்சி. ஆலத்தூர் வட்டம் 48. மேலமாத்தூர் வருவாய் கிராமம் மருதையான் கோவில் நெடுஞ்சாலை அருகில் புல எண் 520/2A ல் 0.16.0 ஏர்ஸ் நிலம் சேகர் மகன் பாலசந்தர் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது.

மேற்படி பட்டாதாரர் வீடு கட்ட இன்று ( 08.03.2026) மதியம் சுமார் 12.45 மணியளவில் பில்லர் அமைத்திட குழி தோண்டும் பொழுது தரையில் சுமார் ஐந்து அடியில் சுமார் 2 அடி உயரமுள்ள பித்தளை பெருமாள் சிலை, தூபக்கால், மணி ஆகியவை கண்டெடுக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்த ஆலத்தூர் வட்டாட்சியர் கவிதா அவர்கள் நேரில் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டுபொருட்களை கைப்பற்றினார். மேற்படி சிலை மற்றும் பூஜை பொருட்கள் மேற்படி பட்டாதாரரிடம் இருந்து பெறப்பட்டு ஆலத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.



# பழைய பிளாஸ்டிக் குடோனில் தீ விபத்து:

தூத்துக்குடி, மார்ச்9: கோவில்பட்டியில் பழைய பேப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் குடோனில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமாகின.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி செக்கடி 3-ஆவது தெருவைச் சேர்ந்தவர் அருண்குமார் (38). இவர் கோவில்பட்டி - சாத்தூர் சாலையில், வேலாயுதபுரம் அய்யனார் கோவில் அருகே எடைமேடை அலுவலகம் நடத்தி வருகிறார். இந்த அலுவலகத்தின் அருகிலேயே பழைய பேப்பர்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பழைய இரும்புச் சாமான்களைச் சேமித்து வைப்பதற்கான கிடங்கு ஒன் றையும் அவர் அமைத்துள்ளார்.

இந்நிலையில், நேற்று மாலை இந்தக் கிடங்கில் திடீரெனத் தீப் பிடித்து எரியத் தொடங்கி யது. பிளாஸ்டிக் மற்றும் காகிதப் பொருட்கள் என்பதால், தீ மிக வேகமாகப் பரவி கிடங்கு முழுவதும் சூழ்ந்தது. இதைப் பார்த்த அக்கம் பக்கத்தினர் உடனடியாகக் கோவில்பட்டி தீயணைப்பு நிலையத்திற்குத் தகவல் தெரிவித்தனர்.

தகவலறிந்த தீயணைப்புப் படையினர் இரண்டு தீயணைப்பு வாகனங்களில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். சுமார் சில மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு தீ முழுமையாகக் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இருப்பினும், கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பழைய பொருட்கள் அனைத்தும் தீயில் கருகி முற்றிலும் நாசமாயின. அதிர்ஷ்டவசமாக உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

# தமிழகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பற்ற சூழல்: சௌமியா அன்புமணி குற்றச்சாட்டு



தூத்துக்குடி, மார்ச்9: தமிழகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பு என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாக உள்ளதாகவும், பெண்கள் அச்சமின்றி நடமாடும் நாளே உண்மையான மகளிர் தினம் என்றும் பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சௌமியா அன்புமணி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது:

தமிழகப் பெண்களின் உரிமைகளை மீட்கும் வகையில் சென்னையில் தொடங்கிய எங்களது 'மகளிர் உரிமை மீட்புப் பயணம்' 128-ஆவது நாளை எட்டியுள்ளது. இதன் நிறைவு நாள் நிகழ்ச்சி இன்று நெல்லை மாவட்டத்தில் நடைபெறுகிறது. உலகெங்கிலும் உள்ள பெண்களுக்கு எனது மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி, மருத்துவம், சுகாதாரம் எனப் பல துறைகளில் பெரும் போராட்டங்களுக்குப் பிறகே பெண்கள் இன்று ஒரு நல்ல நிலையை எட்டியுள்ளனர். ஆனால், இவ்வளவு முன்னேற்றங்களுக்குப் பிறகும் பெண்கள் இன்றும் அச்சத்தோடு வாழ வேண்டிய சூழலே நிலவுகிறது. தமிழகத்தில் 2 வயதுக் குழந்தை முதல் 70 வயது மூதாட்டி வரை யாருக்கும் பாதுகாப்பு இல்லை. பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளும், உடல் ரீதியான தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன.

முன்பெல்லாம் இளைஞர்களும், பெரியவர்களுமே பாலியல் குற்றங்களில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் இன்று 10 முதல் 12 வயது சிறுவர்கள் கூட இத்தகைய கொடுமைகளில் ஈடுபடும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குத் தமிழகத்தில் பெருகி வரும் மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பழக்கங்களே முக்கியக் காரணமாகும். கடந்த 5 ஆண்டுகளில் பள்ளிகளுக்கு அருகிலேயே போதை மாத்திரைகள் தடையின்றிக் கிடைக்கும் அளவிற்குப் போதைப் கலாச்சாரம் தலைவிரித்தாடுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தால் இளைஞர்கள் மதுவிற்கும், போதைக்கும் அடிமையாகித் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்து வருகின்றனர். இது பெண்களின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

எவ்வளவோ தடைகளைத் தாண்டிப் பெண்கள் கல்வி கற்க வெளியே வந்த நிலையில், இந்த போதைப் பழக்கத்தால் மீண்டும் பெண்களை வீட்டிற்குள்ளேயே பூட்டி வைக்கும் கொடூரமான காலத்திற்குச் சென்றுவிடுவோமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சுமார் 14,000 வன்கொடுமை வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றை விரைந்து விசாரிக்கத் தமிழகத்தில் 54 சிறப்பு நீதிமன்றங்கள் தேவை. ஆனால், தற்போது வெறும் 20 நீதிமன்றங்களே உள்ளன. இதனால் பாதிக்கும் மேற்பட்ட வழக்குகள் விசாரணைக்கே வராத நிலை உள்ளது. 6 மாத காலத்திற்குள் வழக்கை முடிப்பதற்கான கட்டமைப்பு வசதிகள் இங்கு இல்லை.

கோவையில் நடைபெற்ற பாலியல் வன்கொடுமை வழக்கில் விரைந்து தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். பெண்கள் எப்போது பயமில்லாமல் தனியாக நடமாட முடிகிறதோ, அன்றுதான் உண்மையான மகளிர் தினம். அதுவரை எங்களது போராட்டம் தொடரும். பெண்களின் பாதுகாப்பிற்கு அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை விட, சமுதாயத்தின் மற்றும் குடும்பங்களின் ஒத்துழைப்பே மிக அவசியம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.





## மேட்டுப்பாளையத்தில் CITU பொதுத் தொழிலாளர் சங்கம் சார்பில்

# சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம்

கோவை, மார்ச்9: கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் செயல்பட்டு வரும் CITU பொதுத் தொழிலாளர் சங்கம் சார்பில் சர்வதேச மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு CITU மாநிலக்குழு உறுப்பினர் சத்யா தலைமை தாங்கினார். சங்க நிர்வாகிகள் சென்னியம்மா மற்றும் கனகாமணி முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக உழைப்பாளர் மார்க்கெட் பகுதியில் உள்ள வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. மேலும் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தை பெற்ற தாய்மார்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் மருத்துவ சேவையைப் பெறும் நோயாளிகளுக்கு ரொட்டி மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, வசந்தா என்ற முதிய பெண்ணுக்கு உழைப்பாளர் மார்க்கெட் பகுதியில் காய்கறி கடை அமைத்து வழங்கப்பட்டது. "மீன் கொடுப்பதை விட மீன் பிடிப்பதை கற்றுக் கொடு" என்ற பழமொழிக்கேற்ப, இந்த முயற்சியின் மூலம் அவர் வியாபாரம் செய்து தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை முன்னெடுக்க வழி ஏற்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சாந்தா ஆனந்தி, மல்லிகா, லட்சுமி, ஜோதி உள்ளிட்ட நிர்வாகிகளுடன் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்

# தமிழக அரசை கண்டித்து 12-ம் தேதி தவெக ஆர்ப்பாட்டம்

சென்னை, மார்ச்9: சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும், தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டுக்கு முடிவுகட்ட வேண்டும், மற்றும் போதை பொருட்களை தடுக்க தவறிய தமிழக அரசை கண்டித்து மாநிலம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் தவெக சார்பில் 12-ம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட தலைநகரங்களில் காலை 10 மணி முதல் 1 மணி வரை நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் பங்கேற்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. முன்னதாக 10-ம் தேதி (நாளை) வேட்பாளர்களுக்கான நேர்காணலை தவெக தலைவர் விஜய், நடத்துகிறார். பனையூர், தவெக தலைமை அலுவலகத்தில் நடக்கும் இந்த நேர்காணலில் வேட்பாளர்களை நேரடியாக விஜய் சந்தித்து கலந்துரையாடி தேர்வு செய்வார் என்று கூறப்படுகிறது.



## கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி-யாக தேர்வு

# உதயநிதி ஸ்டாலினுக்கு மீனவச் சமூகத்தினர் நன்றி!

தூத்துக்குடி, மார்ச்9: மீனவர் சமூகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரனை மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்ததற்காக, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், தூத்துக்குடி வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு மீனவச் சமூகத்தினர் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

தமிழகத்திலிருந்து மாநிலங்களவை உறுப்பினராகப் பரதர் குலத்தைச் சேர்ந்த பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அண்மையில் தேர்வு செய்யப்பட்டார். மீனவர் சமுதாயத்திற்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் இந்த முக்கிய வாய்ப்பை வழங்கிய தமிழக முதல்வருக்குச் சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், அரசு முறைப் பயணமாகத் தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை, கோரமண்டல் சமூக நற்பணி மன்றத் தலைவர் பிரின்ஸ்டன் மெரிண்டோ வி. ராயன் தலைமையிலான நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர். மீனவச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை டெல்லி அவைக்கு அனுப்பி வைத்ததற்காக முதல்வருக்குத் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டதோடு, துணை முதல்வருக்குப் பூங்கொத்து கொடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதர்மத்தை அகற்றிட! ஒன்றுபடுவோம்!! வென்றுவருவோம்!!!
ஸ்ரீ பைரவ சேனைகள் அறக்கட்டளை
கோவிலம்பாக்கம், சென்னை - 600 129.
கௌரவத் தலைவர்கள்
T.நடராஜன் K.முருகேசன் A.V.செந்தில் ராஜன் M.நாராயணன் A.சக்திவேல்
தலைவர் P.ராமகிருஷ்ணன் 9444317157
செயலாளர் T.ரவிசந்திரன் 9940536827
பொருளாளர் S.அருண்குமார் 9994641239
துணை தலைவர் நாஞ்சில் C.மனோகரன்
துணை செயலாளர் T.சுயம்புலிங்கம்
துணை செயலாளர் R.V.கணேசன்
ஆலோசகர்கள் குலசை A.சிதம்பரம் காமதேனு G.சுந்தர் சிங்
மக்கள் தொடர்பு தசரா நாயகி M.ஆனந்த், இசக்கி சுடலை
இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர்கள் T.ஏழுமலை

வாய்மையே வெல்லும்
சோழா கேப்பிட்டல்
CHOLA CAPITAL
G.மைக்கேல்ராஜ் 9840612423 | S.P.சத்தியமூர்த்தி 99406 57605
அலுவலகம் எண் : 9342733367
எண் : 43, கே.கே.சாலை, எம்.ஜி.ஆர் நகர், சென்னை – 600 078.

## முதன்முறையாக பட்டத்தை தக்கவைத்தும்,

# 3-வது முறையாக கோப்பையை வென்றும் சாதனை




ஐசிசி டி20 உலகக் கோப்பைத் தொடரில் அகமதாபாதில் இன்று (மார்ச் 8) நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் விளையாடின.

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணி பேட்டிங்கைத் தேர்வு செய்ய, இந்திய அணி முதலில் விளையாடியது. முதலில் விளையாடிய இந்திய அணி நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவர்களின் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 255 ரன்கள் எடுத்தது.

இந்திய அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக அபிஷேக் சர்மா மற்றும் சஞ்சு சாம்சன் களமிறங்கினர். இந்த இணை இந்தியாவுக்கு மிகவும் அதிரடியான தொடக்கத்தைத்தந்தது. இவர்களது அதிரடியான ஆட்டத்தால் இந்திய அணி பவர்பிளேவில் விக்கெட் இழப்பின்றி 92 ரன்கள் எடுத்தது. அதிரடியாக விளையாடிய அபிஷேக் சர்மா 18 பந்துகளில் அரைசதம் விளாசி அசத்தினார். அவர் 21 பந்துகளில் 52 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 6 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் அடங்கும்.

அதன் பின், சஞ்சு சாம்சன் மற்றும் இஷான் கிஷன் ஜோடி சேர்ந்தனர். இந்த இணை அதிரடியைத் தொடர்ந்தது. ஒவ்வொரு ஓவரிலும் சிக்ஸர்கள் பறந்தன. ரச்சின் ரவீந்திரா வீசிய 14-வது ஓவரில் சஞ்சு சாம்சன் ஹாட்ரிக் சிக்ஸர்களை பறக்கவிட்டு அசத்தினார். அதிரடியாக விளையாடிய இருவரும் அரைசதம் விளாசி அசத்தினர்.

அதிரடியாக விளையாடிய சஞ்சு சாம்சன் 46 பந்துகளில் 89 ரன்கள் எடுத்து ஜேம்ஸ் நீஷம் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதில் 5 பவுண்டரிகள் மற்றும் 8 சிக்ஸர்கள் அடங்கும். சாம்சனைத் தொடர்ந்து, 24 பந்துகளில் அதிரடியாக விளையாடி 54 ரன்கள் (4 பவுண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்கள்) எடுத்திருந்த இஷான் கிஷன் விக்கெட்டினையும் நீஷம் கைப்பற்றி அசத்தினார்.

அடுத்த பந்திலேயே கேப்டன் சூர்யகுமார் யாதவ் விக்கெட்டினை வீழ்த்தி வந்த வேகத்திலேயே அவரை பெவிலியனுக்கு அனுப்பினார் நீஷம். சூர்யகுமார் யாதவ் முதல் பந்திலேயே டக் அவுட்டாகி வெளியேறினார். ஒரே ஓவரில் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார் ஜேம்ஸ் நீஷம். இதனையடுத்து, ஹார்திக் பாண்டியா மற்றும் திலக் வர்மா ஜோடி சேர்ந்தனர்.

ஜேம்ஸ் நீஷம் ஒரே ஓவரில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியது இந்திய அணியின் ரன் வேகத்தைக் கட்டுப்படுத்தியது. ஹார்திக் பாண்டியா மற்றும் திலக் வர்மா இருவரும் பவுண்டரிகள் எடுக்கத் தடுமாறினர். ஹார்திக் பாண்டியா 13 பந்துகளில் 18 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் ஒரு பவுண்டரி மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கும்.

இறுதிக்கட்டத்தில் அதிரடியாக விளையாடிய ஷிவம் துபே 8 பந்துகளில் 26 ரன்கள் எடுத்தார். அதில் 3 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கும். நியூசிலாந்து தரப்பில் ஜேம்ஸ் நீஷம் 3 விக்கெட்டுகளையும், ரச்சின் ரவீந்திரா மற்றும் மாட் ஹென்றி தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். 256 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி நியூசிலாந்து அணி களமிறங்கியது. அந்த அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக டிம் செய்ஃபெர்ட் மற்றும் ஃபின் ஆலன் களமிறங்கினர். இந்த இணை அதிரடியாகத்தொடங்கியது. இருப்பினும், அக்ஷர் படேல் பந்துவீச்சில் ஃபின் ஆலன் 9 ரன்களில் ஆட்டமிழந்தார்.

தொடக்க ஆட்டக்காரர் டிம் செய்ஃபெர்ட் ஒருபுறம் பொறுப்புடன் விளையாட மறுமுனையில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது நியூசிலாந்து. ஜஸ்பிரித் பும்ரா அவர் வீசிய முதல் ஓவரின் முதல் பந்திலேயே ரச் சின் ரவீந்திராவின் விக்கெட்டினைக் கைப்பற்றி அசத்தினார். ரச்சின் ரவீந்திரா (ஒரு ரன்), கிளன் பிலிப்ஸ் (5 ரன்கள்), மார்க் சாப்மேன் (3 ரன்கள்) எடுத்து பெவிலியன் திரும்பினர்.

அதன் பின், கேப்டன் மிட்செல் சாண்ட்னர் மற்றும் டேரில் மிட்செல் சிறிய பார்ட்னர்ஷிப் அமைத்தனர். ஆனால், அந்த பார்ட்னர்ஷிப் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. டேரில் மிட்செல் 17 ரன்களில் அக்ஷர் படேல் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். மிட்செல் சாண்ட்னர் 35 பந்து களில் 43 ரன்கள் எடுத்தார். அதில் 3 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கும். இறுதியில் இந்திய அணி நியூசிலாந்தை 96 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி மூன்றாவது முறையாக டி20 உலகக் கோப்பை சாம்பியன் பட்டத்தை வென்று அசத்தியது. நியூசிலாந்து அணி இந்திய அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 19 ஓவர்களில் 159 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அறிமுக டி20 உலகக் கோப்பையை மகேந்திர சிங் தோனி தலைமையிலான இந்திய அணி வென்று அசத்தியது. கடந்த 2024 ஆம் ஆண்டு ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றிருந்த நிலையில், தற்போது சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

பழைய டிரஸ்ட்
(Trust)
தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
99 44 616 559






## எண்ணெய் கிடங்குகள் மீது குண்டுகள் வீச்சு

# சாலைகளில் ஆறாக ஓடிய கச்சா எண்ணெய் தீப்பற்றி எரிந்ததால் மக்கள் பீதி

வாஷிங்டன்/ டெஹ்ரான், மார்ச்.9: மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் பதற்றம் உச்சத்தை எட்டியுள்ளது. ஈரானின் முக்கிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் எரிபொருள் சேமிப்பு கிடங்குகளை இலக்காக வைத்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய விமானப் படைகள் தாக்குதல்களைத் தொடங்கிஉள்ளன. இதைத் தொடர்ந்து, வளைகுடா நாடுகள் மீதான தாக்குதலையும் ஈரான் தீவிரப்படுத்தியுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் படைகள் மற்றும் ஈரான் இடையிலான போர் 9-வது நாளை எட்டியுள்ளது. மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் மற்றும் அதன் ஆதரவு பெற்ற ஆயுதக் குழுக்கள் தொடர் தாக்குதல்களை நடத்தி வந்தன. இதற்குபதில் கொடுக்கும் விதமாகவும், ஈரானின் பொருளாதார வலிமையை குறைக்கும் நோக்கிலும் அதன் எண்ணெய் வளங்கள் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளன.

சாலைகளில் ஓடும் எண்ணெய்: குறிப்பாக, டெஹ்ரானில் உள்ள 4 எண்ணெய் கிடங்குகள் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில், கச்சா எண்ணெய் வெளியேறி, சாலைகளில் ஆறாக ஓடித் தீப்பிடித்தது. இதனால், பொதுமக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டது. இந்த தாக்குதலில் 4 லாரி ஓட்டுநர்கள் உயிரிழந்தனர். அதேபோல, லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர்.

செயற்கைக்கோள் புகைப் படங்களின்படி, ஈரானில் பல எண்ணெய் கிடங்குகள் தீப்பற்றி எரிவதால், விண்ணை முட்டும் அளவுக்கு கரும்புகை எழுந்துள்ளது. இதனால், அப்பகுதியே இருளில் மூழ்கியுள்ளதுடன், சுற்றுச்சூழலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்ட தகவல்களின்படி, பாதுகாப்புப் பணியில் இருந்த ஈரானிய வீரர்கள் மற்றும் பணியாளர்கள் என 50-க்கும் மேற்பட்டோர் இந்த தாக்குதலின் போது உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதற்கு பதில் கொடுக்கும் விதமாக, குவைத்தில் உள்ள அமெரிக்க விமான தளத்தின் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில், அமெரிக்க ஹெலிகாப்டர் பழுதுபார்க்கும் மையங்கள் சேதமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. வளைகுடா நாடுகள் மீதான தாக்குதலையும் ஈரான் தீவிரப்படுத்தி வருகிறது.

இதற்கிடையே, ஈரான் நாட்டின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்த விவகாரத்தில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்புக்கு ஈரான் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து ஈரானின் பாதுகாப்பு தலைவரும், காமேனியின் முதன்மை ஆலோசகருமான அலி லாரி ஜானி கூறியதாவது:

எங்களது உச்ச தலைவர் காமேனி மற்றும் 1,000-க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்ததை சாதாரண விஷயமாககடந்துசெல்லமுடியாது. எங்கள் உச்ச தலைவர் சிந்திய ரத்தத்துக்கு பழி வாங்குவோம். இதற்கான விலையை அமெரிக்க அதிபர் டிரம்ப் கொடுத்தே தீர வேண்டும்.

வெனிசுலாவில் நடந்தது போல ஈரானிலும் நடக்கும் என ட்ரம்ப் தப்புக் கணக்கு போட்டுவிட்டார். அமெரிக்காவின் மிரட்டலுக்கு அடிபணியமாட்டோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

'ராணுவ நடவடிக்கை தொடரும்'- ஈரானின் இந்த எச்சரிக்கையை அமெரிக்க அதிபர் டிரம்ப் முற்றிலுமாக நிராகரித்துள்ளார். ஈரான் மீதான ராணுவ நடவடிக்கை தொடரும் என தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக சிபிஎஸ் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: அலி லாரிஜானி என்பவர் யார் என்றே எனக்குத் தெரியாது.

பின்னர் அவர் பேசுவதை ஏன்நான் ஒரு பொருட்டாக மதிக்கவேண்டும். எங்கள் நாட்டின் பாதுகாப்புக்கும், சர்வதேச அமைதிக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் எந்த ஒரு சக்தியையும் நாங்கள் சகித்துக்கொள்ள மாட்டோம். ஈரான் ஏற்கெனவே தோற்கடிக்கப்பட்டு விட்டது. எனவே, அந்த நாடு நிபந்தனையற்ற சரணாகதி அடைய வேண்டும். அதுவரை அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகள் தொடரும். இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் புதிய தலைவர் தேர்வு: இதற்கிடையே, அயதுல்லா அலி காமேனி உயிரிழந்ததை தொடர்ந்து, ஈரானின் அடுத்த உச்ச தலைவர் யார் என்பது தேர்வு செய்யப்பட்டு விட்டதாகவும், பாதுகாப்பு கருதி, அவரது பெயர் உள்ளிட்ட விவரங்களை வெளியிடாமல் ஈரான் அரசு ரகசியம் காப்பதாகவும் கூறப்படுகிறது.

"ஈரானின் புதிய உச்ச தலைவர் தேர்வு விவ காரத்தில் மூத்த மத குருமார்களைக் கொண்ட அமைப்பில் ஒருமித்த கருத்து எட்டப்பட்டுள்ளது. நடைமுறை சிக்கல்களுக்கு தீர்வு கண்ட பிறகு விரைவில் ஈரானின் புதிய உச்ச தலைவரின் பெயர் அறிவிக்கப்படும்" என்று மத குருமார்கள் அமைப்பின் முக்கிய உறுப்பினர் அஹ்மத் அலமோல்ஹோடா தெரிவித்துள்ளார்.

ஈரானின் உச்ச தலைவராக அடுத்தடுத்து யார் வந்தாலும், அவர்களையும் குறிவைத்து தாக்குதல் நடத்துவோம் என இஸ்ரேல் ஏற்கெனவே எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத் தக்கது.




# 'புருஷன்' படப்பிடிப்பு மும்முரம்: ஜூன் மாதம் வெளியீடு

சென்னை, மார்ச்9: 'புருஷன்' படத்தின் படப்பிடிப்பு படுவேகமாக நடைபெற்று வருகிறது. ஜூனியில் வெளியிட படக்குழு முடிவு செய்திருக்கிறது.

நயன்தாரா நடித்துள்ள 'மூக்குத்தி அம்மன் 2' படத்தினை இயக்கி முடித்துள்ளார் சுந்தர்.சி. அதனைத் தொடர்ந்து விஷால் நடிக்கும் 'புருஷன்' படத்தினை இயக்கி வருகிறார். இதன் படப்பிடிப்பு சென்னையில் படுவேகமாக நடைபெற்று வருகிறது. ஒரே கட்டமாக இதன் படப்பிடிப்பை முடித்து, ஜூனியில் வெளியிட படக்குழு முடிவு செய்திருக்கிறது.

விஷால் நடிப்பில் உருவாகும் குறுகியகால படமாக இது இருக்கும் என்று கூறப்படுகிறது. அந்தளவுக்கு ஒரு புறம் படப்பிடிப்பு, இன்னொரு புறம் இறுதி கட்டப் பணிகள் என மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதில் தமன்னா, யோகி பாபு உள்ளிட்ட பலர் விஷாலுடன் நடித்து வருகிறார்கள். தற்போதைய சூழலைப் பார்த்தால் சுந்தர்.சி - விஷால் கூட்டணியில் உருவாகும் 'புருஷன்' படமே முதலில் வெளியாகும் என தெரிகிறது. ஏனென்றால் விஷால் இயக்கி வரும் 'மகுடம்' மற்றும் சுந்தர்.சி இயக்கத்தில் உருவாகும் 'மூக்குத்தி அம்மன் 2' ஆகிய படங்களின் இறுதிகட்டப் பணிகள் நடைபெற்று வந்தாலும், முதலில் 'புருஷன்' படமே வெளியாகும் என்கிறார்கள் திரையுலகினர்.

Owned, Printer and Published by **G.SASIREKA** from No: 64/80, Vivehananda Colony, Vadapalani, Chennai - 26, Printing at Annai Abirami Achagam, No: 24, Venguchetty Street, Poonga Nagar, Chennai - 3. Editor: **V.S.N.SHARMA.**